உ

சிவமயம்



தெல்லிப்பழை – பன்னாலை

# திரு. நமசிவாயம் சொக்கலிங்கம்

அவர்களது


# நினைவு மலர்

மலராசிரியர் :

வஸ்ரீ [illegible] சபாரத்தினக்குருக்கள் அவர்கள்
(ஆசிரியர், நகுலேஸ்வர மஹா வித்தியாலயம், கீரிமலை)

இரத்தாட்சி ஆண்டு கார்த்திகைத் திங்கள்

1984



உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்ப மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடிஎன்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள்

## சமர்ப்பணம்

எமது அன்புத் தந்தையின்
நினைவு மலரை
அவர்களின் பாதமலர்களில்
அன்புடன் சூட்டிச் சமர்ப்பிக்கின்றோம்.

பன்றுலை,
தெல்லிப்பழை.
1984 - 11 - 17

சொ. தர்மலிங்கம்
சொ. சண்முகலிங்கம்
திருமதி வி. நகுலேஸ்வரி



திரு. நமசிவாயம் சொக்கலிங்கம் அவர்கள்

தோற்றம் : 1906 - 11 - 11

மறைவு : 1984 - 10 - 18

அறுசீர் விருத்தம்

பிறர்நல மொன்றே பேணிப் பிறவெலாம் மறந்து வாழ்ந்த
திறமுடைப் பெரியோ னென்றன் திருநிறை தோற்றம் கண்டு
நிறையுளம் மகிழ்வி னேங்க நின்றனம் எம்மை நீங்கி
மறைவதால் வருந்த வைத்தாய் மற்றதன் புகழ்க்கு நன்றே.

உ
சிவமயம்

# திரு. ந. சொக்கலிங்கம் அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

ஈழத்தமிழகம் என்ற சிறப்பினில் நின்று திகழும் யாழ்ப்பாணத்திலே தெல்லிப்பழையைச் சேர்ந்த பன்னாலைக் கிராமத்திலே பிரபல சைவ வேளாண் மரபிலே கனக தண்டிகைக் கனகராய முதலியார் வழித்தோன்றலான திரு. வயிரமுத்து நமசிவாயம் அவர்கட்கும் அவரது பாரியார் தையல்பிள்ளைக்கும் அருந்தவப் புதல்வனாக 1906ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ந் திகதி திரு. சொக்கலிங்கம் அவர்கள் தோன்றினார். திருமதி மூத்ததங்கம் கந்தையா திருமதி சின்னத்தங்கம் தில்லைநாயகம் திருமதி செல்லமுத்து கந்தையா திரு கனகராயர் ஆகியோர் இவருடைய உடன்தோன்றல்களாவர். இவர்களனைவரும் இவர் மாட்டுப் பேரன்புடையவர்களாவர்.

திரு. சொக்கலிங்கம் அவர்கள் ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலையிலும் உயர் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பயின்றார்கள். இளமைப் பராயம் தொடக்கம் நற்பண்புகள் உடையவராகவும் கடவுள் பக்தி உடையவராகவும் விளங்கினார். இவர் அரசாங்கத்தில் பகிரங்க வேலைப் பகுதியில் லிகிதராகச் சேர்ந்து பதவியுயர்வுகள் பெற்று முதலாந்தர லிகிதராக உயர்வு பெற்றார். இவரது சிறந்த சேவையு[ம்] கடமையுணர்ச்சியும் ஒழுக்கமும் மேலதிகாரிகளின் அன்பிற்கும் பாராட்டுதல்களுக்கும் ஆளாகச் செய்தது.

திரு சொக்கலிங்கம் அவர்கள் பன்னாலை வேதநாயக முதலியார் வழித்தோன்றலான திரு. அருளம்பலத்திற்கும் அவர் மனைவி பொன்னுப்பிள்ளைக்கும் மகவாயுதித்த காமாட்சிப்பிள்ளையைத் திருமணம் செய்து கொண்டார். காமாட்சிப்பிள்ளையும் இவரது இல்லறத்திற்கேற்ற இல்லாளாய் நற்குண நற்

செய்கையுடையவராய் "தற்காத்துத் தற்கொண்டார்ப் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்: திரு. சொக்கலிங்கம் ஆற்றிய இல்லறம் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற எல்லாம் ஒன்றி இனிதுற அமைந்த நல்லறமாகத் திகழ்ந்தது. இப்பெரியார் தான் புரிந்த மங்கல மனையறத்தின் நன்கலனாக தர்மலிங்கம், சண்முகலிங்கம் நகுலேஸ்வரி ஆகிய மூன்று செய்களைப் பெற்று மகிழ்ந்தார்.

இவரது சிரேஷ்ட புத்திரன் தர்மலிங்கம் அரசினர் நீர்ப்பாசனப் பகுதியில் எஞ்சினியராக உத்தியோகம் பார்ப்பதையும் தனது சொந்த மைத்துனியும் பன்னாலை திரு. கந்தையா அவர்களின் மகளுமாகிய அன்னலட்சுமியை மணந்து மாண்புறு மனையறம் நடாத்தும் சிறப்பையும் திரு. சொக்கலிங்கம் கண்டு களித்தார்.

வடபிரதேச மக்கள் வங்கிகளின் சட்ட ஆலோசகராக உயர்பதவி வகிக்கும் சட்டத்தரணி சண்முகலிங்கம் பன்னாலை திரு. நாகநாதரின் மகள் புனிதவதியைத் திருமணம் செய்தமையையும் பார்த்து மகிழ்ந்தார்.

இவரின் ஏகபுத்திரி நகுலேஸ்வரி தனது அரிய மைத்துனரும் பன்னாலை திரு. கந்தையாவின் மகனுமாகிய அரசினர் வைத்தியசாலை ஆய்வுகூட உத்தியோகத்தர் விஜயரத்தினத்தை மணவினை பூண்டு சகல செல்வங்களுடனும் விளங்குவதைக் கண்ணுறக் கண்டுகளித்தார்.

" அடக்கம் அமரருள் உய்க்கும் " என்ற குறளுக்கு இலக்கணமாய்த் தன்னடக்கம், பொறுமை, சாந்தம், குருபக்தி கடமையுணர்ச்சி முதலாம் பண்புகள் பொருந்திய இவர் யாவருடனும் அன்பாய் பழகியதுடன் கடவுள்பக்தி நிரம்பியவராகவும் காணப்பட்டார். கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான தேவி மகோற்சவ 5ம் திருவிழா உபயம், பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான இரதோற்சவம் (தேர்) ஆகிய உபயங்களைச் சிறப்பாக நடாத்தி வந்தார்.

திரு. சொக்கலிங்கம் அவர்கள் "வினைப்போகம் ஒழிந்தாற் காயம் தினைப்போதும் நிலையாது" என்பதற்கிணங்க 18 - 10 - 84ல் தனது எழுபத்தெட்டாவது வயதில் அவரது பிள்ளைகள், மருமக்கள், பேரர், சகோதரி, மைத்துனர், சுற்றம், சூழலர் யாவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தித் திகைக்கவைத்து ரத்தாட்சி வருடம் ஐப்பசி மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நீழலை நாடினார். அவரது ஆன்மா சாந்தியடைக! ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

1984-11-17 இ. சபாரத்தினக் குருக்கள்

---

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# சிவபுராணம்

## நூற் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்;

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஒய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி

எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழுமபின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

# பண்களும் பாடவேண்டிய இராகங்களும்

(உமாபதிசிவாச்சாரிய சுவாமிகள் அருளியது)

திருமுறை கண்டு தெரிந்தெடுத் தார்வமாய்
இரு கண்களினும் இசைத்துப் பார்க்கவுமே
உறுமோ ரிசைப்பண் ணென்று மிலாமையால்
அருளுவ தெப்படி யம்பலவா வென்றே
பண்கள் தெரியாது பார்த்திபன் நம்பி
எண்குணத் தான்றன் இணையடி போற்ற
விண்ணிடை மொழியொன் றெழலுங் கேட்டு
மண்ணுள் யாழ்ப்பாணர் வழிவந் தவளைப்
பண்ணிசை கேட்டுப் பதிக முரைக்கும்
எண்ணிறைந்த முதலா யியற்று மகவலில்
சொன்னதி யற்றுவாஞ் சொலும்பண் ணிராகமும்
பன்னு பழந்தக்கம் பயிலா ரபியாய்
மன்னு செந்துருத்தி மத்திய மாவதியாய்
தக்க ராகங்களும் தக்கேசி யாவும்
மிக்க காம்போதி விதித்தது எனவும்
இந்தளம் நாதநா மக்கிரியை யென்றே
அத்திருத் தாண்டகம் அரிகாம் போதியாய்
விந்தைக் காந்தாரம் விளங்கு நவரோசுவாய்
சந்த சாதாரி தகுபந்துவ ராளியாய்
நற் சீகாமரம் நாதநாமக் கிரியையாய்
பொற் கௌசிகமும் புகழும் பைரவியாய்
வியாழக் குறிஞ்சி மிளிர்சௌ ராட்டிரம்
தயாள பஞ்சமம் சாற்று மாகிரியாய்
பூந்திருக் குறுந்தொகை பூரிகலி யாணியாய்
காந்தார பஞ்சமம் கேதார கௌளையாய்
நட்ட பாடையும் நாட்டை யென்றோதும்
நட்ட ராகமும் நற்பந்து வராளியாய்
ஏதுசெவ் வழியும் எதுகுல காம்போதி
புறநீர்மை என்னல் பூபாள மெனவும்
குறிஞ்சி யென்றோதும் குறிஞ்சியே யாகும்:

மேகராகக் குறிஞ்சி மேலான நீலாம்பரி
நேரிசை கொல்லி நேர்ந்த நவரோசுவாய்
தார்பழம் பஞ்சுரம் சங்கரா பரணம்
பியந்தைக் காந்தாரம் பேசுநவ ரோசுவாய்
அந்தாளிக் குறிஞ்சி அரியசாமா வென்று
எந்தை நம்பியு மியற்றின னிதனைத்
திருமுறை கண்ட திருப் புராணத்துள்
வருமுறை கண்டு வகுத்தனன் கட்டளை.

(திருஞானசம்பந்தகண்ணுடைய வள்ளலார் ஆதீனத்தில் இருந்த ஏட்டுச் சுவடியிலிருந்து பார்த்துப் பிரதி பண்ணுப்பட்டது. தமிழிசைச் சங்கத்தின் பண்ணாராய்ச்சி மகாநாட்டிற் கீழையூர் ச. நடராசதேசிகர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது)

| பண் | பாடவேண்டிய இராகம் |
|---|---|
| 1. நட்டபாடை | நாட்டை |
| 2. தக்கராகம் | காம்போதி |
| 3. பழந்தக்கராகம் | ஆரபி |
| 4. தக்கேசி | காம்போதி |
| 5. குறிஞ்சி | குறிஞ்சி |
| 6. வியாழக்குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| 7. மேகராகக்குறிஞ்சி | நீலாம்பரி |
| 8. இந்தளம் | நாதநாமக்கிரியை |
| 9. காந்தாரம் | நவரோசு |
| 10. பியந்தைக்காந்தாரம் | நவரோசு |
| 11. நட்டராகம் | பந்துவராளி |
| 12. செவ்வழி | யதுகுலகாம்போதி |
| 13. காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை |
| 14. கொல்லி | நவரோசு |
| 15. கௌசிகம் | பைரவி |
| 16. பஞ்சமம் | ஆகிரி |
| 17. சாதாரி | பந்துவராளி |
| 18. பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| 19. புறநீர்மை | பூபாளம் |

திருமந்திரம்: அரன்துடிதோற்றம் அமைத்தல் திதியாம், அரன் அங்கிதன்னில் அறையிற் சங்காரம் / அரனுற்றணைப்பில் அமருந்திரோதாயி / அரனடியென்னும் அனுக்கிரகம்மே;

சிவமயம்

# திருத்தொண்டர் அறுபத்து மூவர்

தத்துமூ தெயில் மூன்றும் தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேர் அறு
பத்துமூவர் பதமலர் போற்றுவாம்.

1. **அதிபத்த நாயனார் :-** நுளையர் (மீன் பிடிப்பவர்), சோழ நாடு, நாகபட்டினம் - நவரத்தினமிழைத்த பொன்மீனைத் தாம் வைத்துக்கொள்ளாமல் சிவார்ப்பணம் செய்தல்; ஆவணி ஆயிலியம் நாளில் முத்தியடைந்தார்.

2. **அப்பூதியடிகள் நாயனார் :-** அந்தணர், சோழநாடு, திங்களூர் பிள்ளை இறந்ததையும் மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகட்கு அமுதளித்தல், தைச் சதயம் நாளில் முத்தியடைந்தார்;

3. **அமர்நீதி நாயனார் :-** வணிகர், சோழநாடு, பழையாறை - கோவணத்துக்கு நிறையாக மனைவி மக்கள் சொத்துகளுடன் தம்மையும் சிவனடியாருக்குத் தருதல், ஆனிப்பூரம் நாளில் முத்தியடைந்தார்.

4. **அரிவாட்டாய நாயனார் :-** வேளாளர், சோழநாடு, கணமங்கலம் - சிவ நிவேதனத்துக்குரிய பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தையரிதல். தைத்திருவாதிரை நாளில் முத்தியடைந்தார்.

5. **ஆனாய நாயனார் :-** இடையர், மழநாடு, மங்கலவூர் - பசு மேய்க்கும்போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்தல். கார்த்திகை அத்தம் நாளில் முத்தியடைந்தார்.

6. **இசைஞானியார் :-** ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை பிள்ளையாகப் பெற்று வளர்த்த பெண்மணியார். சித்திரைச் சித்திரை நாளில் முத்தியடைந்தார்.

7. **இடங்கழி நாயனார் :-** அரசர், கோனாடு, கொடும்பாளூர் - அடியார் வழிபாடு செய்ய நெல் திருடினவர்க்கு மேலும் பொருளும் நெல்லும் தருதல். ஐப்பசிக் கார்த்திகை நாளில் முத்தியடைந்தார்.

8. **இயற்பகை நாயனார்** :- வணிகர், சோழநாடு, காவிரிப்பூம் பட்டினம் - சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தல். மார்கழி உத்தரம் நாளில் முத்தியடைந்தார்.

9. **இளையான் குடிமாற நாயனார்** :- வேளாளர். இளையான்குடி - விதைத்த நெல்லெடுத்து வீட்டின் அலக் கெரித்து அடியார்க்கமுதளித்தல். ஆவணி மகம்நாளில் முத்திபடைந்தார்.

10. **உருத்திர பசுபதி நாயனார்** :- அந்தணர், சோழநாடு, திருத்தலையூர் - அல்லும் பகலும் திருக்குளத்தில் கழுத்தளவில் நின்று ஸ்ரீருத்திர மந்திரம் ஜெபித்தல். புரட்டாதி அச்சுவினி நாளில் முத்தியடைந்தார்.

11. **எறிபத்த நாயனார்** :- சோழநாடு, கருவூர் - பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டுதல். மாசி அத்தம் நாளில் முத்தியடைந்தார்.

12. **ஏயர்கோன் கலிக்காம நாயனார்** :- வேளாளர், சோழநாடு. திருப்பெருமங்கலம் - சிவபெருமானைத் தூதாகவிடுத்த வன்றொண்டரை இகழ்ந்து பின்பு திருவருள் விளையாட்டால் அவருடைய நண்பரானது. ஆனி இரேவதி நாளில் முத்தியடைந்தார்.

13. **ஏனாதி நாயனார்** :- சான்றார், சோழநாடு, எயினனூர்-போர் புரியும் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் அவனாற் கொல்லப்படும்படி நடந்து கொண்டது. புரட்டாதி உத்தராடம் நாளில் முத்தியடைந்தார்.

14. **ஐயடிகள் காடவர்கோன் நாயனார்** :- குறுநில மன்னர், தொண்டைநாடு, காஞ்சிபுரம் - பதவியை வெறுத்துத் தலயாத்திரை செய்து க்ஷேத்திர வெண்பாவால் நிலையாமை கூறியது. ஐப்பசி மூலம் நாளில் முத்தியடைந்தார்.

15. **கணநாத நாயனார்** :- அந்தணர், சோழநாடு, சீகாழி - திருஞானசம்பந்தரை வழிபட்டுச் சரியைத் தொண்டர்க்குப் பயிற்சி தந்தது. பங்குனி திருவாதிரை நாளில் முத்தியடைந்தார்.

16. **கணம்புல்ல நாயனார்** :- இருக்கு வேளூர் - புல்விற்ற நெய் கொண்டு திருவிளக்கெரித்தல், நெய்யின்மையால் தமது தலைமயிரையே எரித்தல். கார்த்திகைக் கார்த்திகை நாளில் முத்தியடைந்தார்.

17. **கண்ணப்ப நாயனார் :-** வேடர், தொண்டைநாடு, உடுப்பூர் - ஆறே நாளில் அளவுகடந்த பக்திசெய்து காளத்தியப்பருக்குக் கண் அப்பியது. தை மிருக சீரிடம் நாளில் முத்தியடைந்தார்.

18 **கலிக்கம்ப நாயனார் :-** வணிகர், நடுநாடு, பெண்ணாகடகம் - தமது பழைய வேலையாள் சிவனடியானாக வந்தபோது தாம் அவனை வழிபட்டு, வழிபடாத தமது மனைவி கையை வெட்டுதல். தை இரேவதி நாளில் முத்தியடைந்தார்.

19. **கலிக நாயனார் :-** செக்கார், தொண்டைநாடு, திருவொற்றியூர் - திருவிளக்குக்கு எண்ணெய் இன்மையால் தமது இரத்தங் கொண்டு எரிக்க முயலுதல். ஆடிக்கேட்டை நாளில் முத்தியடைந்தார்.

20. **கழறிற்றறிவார் நாயனார் (சேரமான் பெருமாள் நாயனார்) :-** அரசர், மலைநாடு, கொடுங்கோளூர் - நடராசர் பாதச் சிலம்பொலி கேட்கத் தாழ்ந்தமையால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோழமை பெற்றது. சிவபெருமானுடைய திருமுகப் பாசுரம் பெற்றது. கயிலை சென்று ஞானவுலா பாடியது. ஆடிச் சுவாதி நாளில் முத்தியடைந்தார்.

21. **கழற்சிங்க நாயனார் :-** குறுநிலமன்னர் - சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காகத் தமது மனைவியின் மூக்கை ஒரு சிவனடியார் அறுத்த தண்டனை போதாதென்று அவள் கையையும் வெட்டுதல். வைகாசிப் பரணி நாளில் முத்தியடைந்தார்.

22. **காரி நாயனார் :** சோழநாடு, திருக்கடவூர் - கோவை பாடிப் பொருள் பெற்று ஆலயப்பணி செய்தல். மாசிப் பூராடம் நாளில் முத்தியடைந்தார்.

23. **காரைக்காலம்மையார் (பேயார்) :-** வணிகர், சோழநாடு, காரைக்கால் - சிவபெருமானை வேண்டி மாம்பழமும், பேய் வடிவும் பெற்றது. ஆலங்காட்டில் ஆடல் கண்டது. பங்குனிச் சுவாதி நாளில் முத்தியடைந்தார்.

24. **குங்கிலியக்கலைய நாயனார் :-** அந்தணர், சோழநாடு, திருக்கடவூர் - மனைவியின் தாலியை விற்றுக் குங்கிலியம் வாங்கியது. சாய்ந்த இலிங்கத்தைக் கழுத்தில் பூமாலைகொண்டு நிமிர்த்தியது. ஆவணி மூலம் நாளில் முத்தியடைந்தார்.

25. **குலச்சிறை நாயனார் :-** பாண்டிநாடு, மணமேற்குடி - அரசன் சமணனாயிருந்தபோதும் தாம் சிவனடியாரை வழிபட்

டது. திருஞானசம்பந்தரை அழைத்து வந்து அரசனையும் நாட்டினையும் சைவமாக்கியது. ஆவணி அனுஷம் நாளில் முத்தியடைந்தார்.

26 **கூற்றுவ நாயனார்** :- குறுநில மன்னர், களந்தை - தில்லை வாழந்தணர் தமக்கு முடிசூட்ட மறுக்கவே, தில்லையம்பல வன் திருவடிகளையே முடியாகச் சூட்டப்பெற்றது. ஆடித் திருவாதிரை நாளில் முத்தியடைந்தார்.

27. **கோச்செங்கட் சோழ நாயனார்** :- அரசர், சோழநாடு - எழு பது சிவாலயங்கள் கட்டியது. முற்பிறவியிற் சிலந்தியாகச் சிவபூசை செய்தது. மாசிச் சதயம் நாளில் முத்தியடைந் தார்.

28. **கோப்புலி நாயனார்** :- வேளாளர், சோழநாடு, திருநாட்டி யத்தான்குடி - சிங்கடி, வனப்பகை என்ற இரண்டு புதல்வி யரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அர்ப்பணம் செய்தது. சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரனைவரையும் சிசு வுட்படக் கொன்றது. ஆடிக் கேட்டை நாளில் முத்திய டைந்தார்.

29. **சடைய நாயனார்** :- ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்று அவருக் குச் சடங்கவி சிவசாரியார் புதல்வியைத் திருமணம் செய் விக்க முயற்சித்தது. மார்கழித் திருவாதிரை நாளில் முத்தி யடைந்தார்.

30. **சண்டேசுவர நாயனார்** - அந்தணர், சோழநாடு, திருச் சேய்ஞலூர் - அபிடேகப் பாற்குடத்தை இடறிய தந்தை யின் காலை வெட்டித் தொண்டர்க்கு நாயகம் பெற்றது. தை உத்திரம் நாளில் முத்தியடைந்தார்.

31. **சத்தி நாயனார்** :- வேளாளர், சோழநாடு, வரிஞ்சியூர் - சிவ னடியார்களைக் குறை கூறுபவர்களுடைய நாக்கை அறுத் தல் ஐப்பசிப் பூசம் நாளில் முத்தியடைந்தார்.

32. **சாக்கிய நாயனார்** :- வேளாளர், திருச்சங்கமங்கை - மறவாது நாடோறும் சிவலிங்கத்தின் மீது கல்லெறிந்து வழிபடல். மார்கழிப் பூராடம் நாளில் முத்தியடைந்தார்.

33. **சிறப்புலி நாயனார்** :- அந்தணர், சோழநாடு, திருஆக்கூர் - அடியார்கட்கு அமுதும் பொருளும் தருதல். கார்த்திகைப் பூராடம் நாளில் முத்தியடைந்தார்.

34. **சிறுத்தொண்ட நாயனார் :-** மாமாத்திரப் பிராமணர், சோழ நாடு, திருச்செங்காட்டங்குடி - வாதாவிப் போர் வென்றது. சிவனடியாருக்குத் தமது ஒரே பிள்ளையைக் கறியாகச் சமைத்து வைத்தது. சித்திரைப் பரணி நாளில் முத்தியடைந்தார்.

35. **சுந்தரமூர்த்தி சுவாமிகள் :-** ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - திருத்தொண்டத் தொகை பாடியது. இறைவனைத் தூது கொண்டது. முதலையுண்ட பிள்ளையை வருவித்தது முதலியன. ஆடிச் சுவாதி நாளில் முத்தியடைந்தார்.

36. **செருத்துணை நாயனார் :-** வேளாளர், சோழநாடு, தஞ்சாவூர் - கழற்சிங்க நாயனாருடைய மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காக அவள் மூக்கை அரிந்தது ஆவணிப் பூசம் நாளில் முத்தியடைந்தார்.

37. **சோமாசிமாற நாயனார் :-** அந்தணர், சோழநாடு, திருஅம்பர் - வேதவேள்வி செய்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபடுதல். வைகாசி ஆயிலியம் நாளில் முத்தியடைந்தார்.

38. **தண்டியடிகள் நாயனார் :-** சோழநாடு, திருவாரூர் - பிறவிக் குருடராயிருந்தும் திருக்குளப்பணி செய்து குருடு நீங்கிச் சமணரை வென்றது பங்குனிச் சதயம் நாளில் முத்தியடைந்தார்.

39. **திருக்குறிப்புத் தொண்ட நாயனார்:-** ஏகாலியர், தொண்டை நாடு, காஞ்சிபுரம் - சிவனடியாருக்கு வாக்களித்தபடி துணியைத் தோய்த்துலர்த்தித்தர முடியாமற் போனபடியால் தமது தலையைக் கல்லின் மீது மோதிக் கொள்ளுதல். சித்திரைச் சுவாதி நாளில் முத்தியடைந்தார்.

40. **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் :-** அந்தணர், சோழநாடு, சீகாழி - உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப் பெறுதல், தேவாரம்பாடி, எலும்பைப் பெண்ணுக்குதல் முதலிய அற்புதங்கள் செய்து தமது திருமணத்துக்கு வந்தவர்கள் அனைவருக்கும் முத்திதருதல். வைகாசி மூலம்நாளில் முத்தியடைந்தார்.

41. **திருநாவுக்கரசு சுவாமிகள் :-** வேளாளர், நடுநாடு, திருவாமூர் - ஐந்தெழுத்தோதிக் கருங்கல்லின்மேல் கடலில் மிதந்து கரையேறிப் பல தேவாரங்கள் பாடிக் கைத்தொண்டு செய்து முத்தியடைதல். சித்திரைச் சதயம் நாளில் முத்தியடைந்தார்.

42. **திருநாளைப் போவார் நாயனார் (நந்தனார்) :-** புலையர், சோழ நாடு - ஆதனூர் தில்லையைக் காண விரும்பி தீப்புகுந்து முனிவராயெழுந்து சிற்றம்பலவன் திருமுன்பு மறைந்தது. புரட்டாதி ரோகிணி நாளில் முத்தியடைந்தார்.

43 **திருநீலகண்ட நாயனார் :-** குயவர், சோழநாடு, சிதம்பரம் - அயலறியா வண்ணம் மனைவியின் சபதத்துக்கு உடன்பட்டு அவளைத் தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்திப்பின் திருவருளால் இளமை பெற்றது. தை விசாகம் நாளில் முத்தியடைந்தார்.

44. **திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் :-** பாணர், நடுநாடு, திருஎருக்கத்தம்புலியூர் - திருஞானசம்பந்தருடன் சென்று யாழ்த்தொண்டு புரிந்தது. வைகாசி மூலம் நாளில் முத்தியடைந்தார்.

45. **திருநீலநக்க நாயனார் :-** அந்தணர், சோழநாடு, சாத்தமங்கை - அன்போடு சிவலிங்கத்தை ஊதித் துமித்தல் அனுசிதமன்றெனக் காட்டப்பெற்றது. பாணர்க்கு வேதிகையில் இடந்தந்தது. திருஞானசம்பந்தர் திருமணத்தை நடத்தி முத்தி பெற்றது. வைகாசி மூலம் நாளில் முத்தியடைந்தார்.

46. **திருமூல நாயனார் :-** இடையர், சோழநாடு, சாத்தனூர் - மூலன் உடலில் தாம் புகுந்து மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் அருளிச் செய்தது. ஐப்பசி அச்சுவினி நாளில் முத்தியடைந்தார்.

47. **நமிநந்தியடிகள் நாயனார் :-** அந்தணர், சோழநாடு, ஏமப்பேறூர் - தண்ணீரால் விளக்கெரித்தல், திருவாரூர்ப் பிறந்தாரை எல்லாம் சிவசாரூப்பியராகக் காணுதல். வைகாசிப் பூசம் நாளில் முத்தியடைந்தார்.

48. **நரசிங்கமுனையரைய நாயனார் :-** குறுநிலமன்னர், நடுநாடு - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தல், சிவவேடம் பூண்ட காமக்குறி மலர்ந்த தூர்த்தனையும் வழிபடுதல். புரட்டாதிச் சதயம் நாளில் முத்தியடைந்தார்.

49. **நின்றசீர் நெடுமாற நாயனார் :-** அரசர், பாண்டி நாடு, மதுரை - திருஞானசம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்கி அவர் திருவாக்கால் கூன் நிமிரப் பெற்றுச் சைவராகியது. ஐப்பசிப் பரணி நாளில் முத்தியடைந்தார்.

50. **நேச நாயனார் :-** சாலியர், காம்பீலி நகரம் - சிவனடியார்கட்கு வஸ்திர தானம் செய்தல். பங்குனி உரோகினி நாளில் முத்தியடைந்தார்.

51. **புகழ்ச்சோழ நாயனார் :-** அரசர், சோழநாடு, உறையூர் - பகைவனது அறுபட்ட தலையில் சிவசின்னமாகிய சடை கண்டஞ்சி உயிர் விட்டது. ஆடிக் கார்த்திகை நாளில் முத்தியடைந்தார்.

52. **புகழ்த்துணை நாயனார் :-** ஆதிசைவர், செருவிலி புத்தூர் - சிவபூசைக்கு உதவியாக பஞ்சகாலத்தில் இறைவனால் ;காசு அளிக்கப்பெற்றது. ஆவணி ஆயிலியம் நாளில் முத்தியடைந்தார்.

53. **பூசலார் நாயனார் :-** அந்தணர், தொண்டை நாடு, திருநின்றவூர் - மனதினாலேயே கோயில் கட்டிச் சிவவழிபாடு செய்தல். ஐப்பசி அனுஷம் நாளில் முத்தியடைந்தார்.

54. **பெருமிழலைக் குறும்ப நாயனார் :-** பெருமிழலையூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு அவர் கயிலை செல்லுதலறிந்து யோகத்தால் தாமும் கயிலை சென்றது; ஆடிச் சித்திரை நாளில் முத்தியடைந்தார்.

55. **மங்கையர்க்கரசியார் (மானியார்) :-** அரசியார், பாண்டிநாடு - திருஞானசம்பந்தரை வரவழைத்துத் தமது கணவரையும் நாட்டையும் சைவமாக்கியது. சித்திரை உரோகிணி நாளில் முத்தியடைந்தார்.

56. **மானக்கஞ்சாற நாயனார் :-** வேளாளர், சஞ்சாறூர் - கலியாணம் தொடங்கும்போது கலியாணப் பெண்ணாகிய தமது மகளின் தலைமயிரை அறுத்துச் சிவனடியாருக்குத் தருதல். மார்கழி சுவாதி நாளில் முத்தியடைந்தார்.

57. **முருக நாயனார் :-** அந்தணர், சோழநாடு, திருப்புகலூர் - புஷ்பத் தொண்டு செய்து திருஞானசம்பந்தர் திருமணத்தில் முத்தி பெற்றது. வைகாசி மூலம் நாளில் முத்தியடைந்தார்.

58. **முனையடுவார் நாயனார் :-** வேளாளர், சோழநாடு, திருநீடூர் - கூலிக்குப் போர் செய்து அக் கூலிகொண்டு சிவனடியாரை வழிபடுதல். பங்குனிப் பூசம் நாளில் முத்தியடைந்தார்.

59. **மூர்க்க நாயனார் :-** வேளாளர், தொண்டைநாடு, திருவேற்காடு - சூதாட்டத்தாற் கிடைக்கும் இலாபம் கொண்டு சிவனடியாரை வழிபடுதல். கார்த்திகை மூலம் நாளில் முத்தியடைந்தார்.

60. மூர்த்தி நாயனர் :- வணிகர், பாண்டிநாடு, மதுரை - சந்தனம் தருகிற திருப்பணியில் முட்டுப்பாடு நேரவே முழங்கையை அரைத்தல், திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மும்மையால் உலகாளுதல். ஆடிக் கார்த்திகை நாளில் முத்தியடைந்தார்.

61. மெய்ப்பொருள் நாயனர் :- குறுநில மன்னர், நடுநாடு, திருக்கோவலூர் - வஞ்சித்துத் தம்மைக் கொல்லும் சிவவேடதாரியைக் காப்பாற்றித் தாம் உயிர் விடுதல். கார்த்திகை உத்திரம் நாளில் முத்தியடைந்தார்.

62. வாயிலார் நாயனர் :- வேளாளர், தொண்டை நாடு, மயிலாப்பூர் - மானசீகமான ஞானபூசை செய்தல். மார்கழி இரேவதி நாளில் முத்தியடைந்தார்.

63. விறன்மிண்ட நாயனர் :- வேளாளர், மலைநாடு, செங்குன்றூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுதற்குக் காரணராயிருத்தல். சித்திரைத் திருவாதிரை நாளில் முத்தியடைந்தார்.

---

மாணிக்கவாசகர் :- பாண்டிநாடு, திருவாதவூர், ஆமாத்தியப் பிராமணர் குலம் - புத்தரை வாதில் வென்றூர், ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார். திருவாசகம், திருக்கோவையார் இரண்டையும் அருளியவர். அவற்றை இறைவனே ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதினர். ஆனி மகத்தில் முத்தியடைந்தார்.

## தொகையடியார்கள்

1. முப்பாதேும் திருமேனி தீண்டுவார்
2. தில்லைவாழந்தணர்
3. பொய்யடிமையில்லாத புலவர்
4. பத்தராய்ப் பணிவார்
5. பரமனையே பாடுவார்
6. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்
7. திருவாரூர்ப் பிறந்தார்
8. முழுநீறு பூசிய முனிவர்
9. அப்பாலுமடிச்சார்ந்தார்

உ
சிவமயம்

தெல்லிப்பழை — பன்னாலை
கனகதண்டிகைக் கனகராய முதலியார்
வழித்தோன்றலும்
சைவவேளாள் மரபினருமாகிய

# திரு. நமசிவாயம் சொக்கலிங்கம் அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்த

# நினைவுப் பாக்கள்

## வெண்பா

சாற்றுநல் ரத்தாட்சி சேரைப் பரியபரம்
போற்றுநல் நவமிதனை யுற்றகுரு — கூற்றுதைத்தான்
செம்மலர்த்தாள் சேர்ந்தான் சீலன்சொக்க லிங்கம்
மண்ணுலக வாழ்வு மறந்து.

## ஆசிரியப்பா

திகழ்ந்திடு மிலங்கா தீவின் வடபால்
மருவுயாழ்ப் பாண மாநக ரதன்கண்
தென்னைமா கதலி திகழுநற் பூகம்
ஆகிய நிறைந்தே அமையு மாண்பதும்
வித்தியா லயத்தொடும் விளங்கு மைம்முகன்
அமர்ந்தருள் செய்யு மாலயந் தாமும்
தன்னகத் துற்ற தகைமை சான்றதும்
இந்திர னென்ன வியைந்திடு செல்வர்
மன்னி விளங்கும் மகிமை மிக்கதும்
ஆகுநற் பண்புகள் அமைந்தே மிளிரும்
தெல்லிப் பழையாம் திகழுநன் நகரில்
வவுணு வத்தையை மன்னி வைகிய

கனக தண்டிகைக் கனக ராய
முதலியார் வம்சம் விளங்க வுதித்தோன்
வயிர முத்துவின் அரியநன் மைந்தன்
நமசிவாய மென்னும் நாமம் படைத்தவன்
பன்னலை யென்னப் பகர்ந்திடு பதிக்கண்
விஸ்வநாத முதலியார் தன்வழித் தோன்றிய
தையற் பிள்ளைத் தெரிவையை மணந்து
ஆற்றிய தவத்தின் பயனதூஉ வென்ன
வந்தவ தரித்த மாசிலா வள்ளல்
செல்விருந் தோம்பி வருவிருந் தினரை
நாடி மகிழ்வுறு நன்மனம் படைத்தோன்
ஊருணி நீர்நிறைந் துற்று லெனவும்
பயன்மர முள்ளூர்ப் பழுத்தா லெனவும்
பலர்க்கும் பயன்படும் பண்புமிக் குடையோன்
வரத்தல வேழ முகத்து வள்ளலை
வழுத்தியே நித்திய நைமித் தியங்கள்
செழுத்திடு மருள்பெறச் செய்வித் துயர்ந்தோன்
இலிகிதர் சேவை புரிந்திளைப் பாறிய
சீர்சால் பண்பினன் சொக்க லிங்கம்
வேத நாயக முதலிவழி வந்த
அருளம் பலமென அமையுநன் நாமன்
பொன்னுப் பிள்ளை மாதினை மணந்தே
பெற்று மகிழ்ந்த பொற்பார் வனிதை
கற்பின் செல்வி காமாட்சிப் பிள்ளையை
இல்லற மல்லது நல்லற மன்றெனும்
எழில்மூ தாட்டி ஏத்துரைக் கேற்ப
அங்கிசான் றுக அருமண மியற்றி
வாழ்வு நடாத்திய வையகப் பேறு
அரிவையர் திலகம் அன்ன லட்சுமியை
மன்றல் சேர மணவினை பூண்டே
சகுந்தலா தன்னொடு சாரும் கௌசலா
காசினி முதல்வன் கலியுக வரதன்
தம்மைப் பெற்று மகிழ்ந்த மேலோன்
மூதூர் எனப்பகர் பழம்பதி யதனில்
நீர்ப்பாசன எஞ்சினியர் பதவி தாங்கும்
சீருடைச் செம்மல் தர்ம லிங்கம்
செல்வ நாயகிச் சேயிழை தன்னைக்
கனல்சான் றுகக் கடிமண மியற்றியே
வையக மீதில் வாழ்வு நடாத்திச்

சஜீவன் மகவைப் பெற்ற காலை
இம்மனை யமருல கடையவே பின்னர்
புனிதவதி யெனும் பாவை நல்லாளை
நன்மண மியற்றி நயப்பொடு மேவியே
ரஜனன் அஜேஜன் மக்களை யெய்திய
யாழ்நகர் மக்கள் வங்கிச் சட்ட
ஆலோசக ராகும் சட்டத் தரணி
சண்முக லிங்கத் தூயநல் லறிஞன்
மதவாச்சி அரசினர் வைத்திய சாலைத்
தொழில் நுட்ப வியலாள ராகப்
பணிபுரி புகழோன் விஜய ரத்தினம்
மணவாள னுக மாநிலத் துறவே
தயாவதி தன்னெடு குறிஞ்சிக் குமரன்
பகரும் பால சுப்ர மணியம்
தம்மைப் புத்திர ராகப் பொருந்திய
சுகுணமார் செல்வி நகுலேஸ் வரி
அறிவன அறிந்த நன்மக்க ளாகப்
பாரும் மகிழப் பெற்றே மகிழ்ந்தனன்.
காசினி போற்றும் கந்தையாவை மணந்து
ஞான சவுந்தரி தையலை வரித்தே
மனே ரஞ்சனியொடு மன்னும் தேவ
ரஞ்சனி நீலாவதி யாகிய மக்களைப்
பெற்றே மகிழ்ந்த பேரற முதல்வன்
அமரர் பால சுப்பிர மணியம்
பகர்சுகா தாரப் பகுதியிற் சேவை
புரிந்திளைப் பாறிய புண்ணிய சீலன்
சண்முக நாத வள்ளலை மணந்தே
செல்வன் கனக சபாபதியை மணவினை
பூண்டு தாரணி மகிழ்சிவ சாத்தி
செல்வ ஸ்கந்தன் தம்மைப் பெற்ற
அருணு தேவிக் காரிகை யுடனே
குகதாசனைக் கடிமண மியற்றியே துவாரகன்
கோகுலன் சேய்களை எய்தியே வாழும்
தையலர் திலகம் தர்ம பூபதி
சிறீ ஸ்கந்த ராசா பகரும்
விஜய ராணி தன்னெடு சிறீ
பவானந்த ராசா சிறீபாஸ்கர ராஜா
மைந்தரைப் பெற்ற மாது சரஸ்வதி
இளைப் பாறிய அதிப ராகும்

கனக சபையின் கருதுநன் மனையாகித்
தில்லை ராசன் திகழ்விக்ன ராசன்
மாசிலாச் செல்வி மங்கையர்க் கரசி
தேவ காந்தி சேர்சந்திர வதனு
என்னும் சேய்களை எய்திய நங்கை
பார்புகழ் தேவி பரமேஸ் வரியும்
எய்தும் லிகிதராய் இயைந்திடு சேவை
தான்புரிந் திளைப் பாறிய மேலோன்
மயின்வா கனந்தன் மாண்புறு மனையாகிச்
சிறீ குமாரன் செல்வனைப் பெற்ற
மங்கையர் திலகம் மகேஸ்வரி தானும்
செய்யவள் நிகழும் சர்வேஸ் வரியை
மணந்து சிவாஜினி யுடனே சுதர்சினி
அமிர்தினி தயாளன் மக்களைப் பெற்ற
உணவுற் பத்தி உத்தியோ கத்தர்
வையகம் போற்றும் விநாயக மூர்த்தி
என்சினியர் தர்ம லிங்கம் தன்னை
வரித்தே சகுந்தலா வுடன் கௌசலா
கலியுக வரதன் தம்மை யெய்திய
பேறுடை மாது அன்ன லட்சுமி
நகுலேஸ் வரியை நன்மண மியற்றியே
தயாவதி யுடன் குறிஞ்சிக் குமரன்
பகரும் பால சுப்பிர மணியம்
புத்திர ராகப் பொருந்திய புகழோன்
மதலாச்சி வைத்திய சாலையில் தொழில்புரி
முதல்வன் விஜய ரத்தினம் தானும்
சவூதி அரேபியா தன்னில் கணக்காள
ராக விளங்கும் விமல நாதன்
மணவாள னுக மாநிலத் துறவே
விஜய குலன் சேரும் விமலினி
மக்களைப் பெற்ற மனோன் மணி
நன்மக்க ளாக நானிலத் துற்ற
மங்கையர் திலகம் மூத்த தங்கம்
தில்லை நாயகம் தன்னை மணந்து
சிவகதி யெய்திய தியாக ராசாவொடு
நகுலாம் பிகையை வரித்தே சுப்பிர
தீபன் பகர் சபா ரத்தினம்
ஆகிய சேய்களை அவனியி லெய்திய
பேரா சிரியர் வேலா யுதத்துடனே

அருங்குணக் குன்ற மாகும் ஆறுமுகம்
தம்மைப் பெற்ற சின்னத் தங்கம்
கனவான் கந்தையா தன்னை மணந்தே
சிவயோகத் தையலை வரித்து அனித்தா
அமுதா அருணன் மக்களைப் பெற்ற
பேறுடை மேலோன் சச்சிதா னந்தம்
ஞானேஸ் வரியை மணந்து கவிதா
பொற்கவி மைந்தரை யெய்திய சீர்சால்
செம்மல் சிவா னந்தம் தன்னுடன்
பால ரத்தினம் தன்பெருந் தலைவ
ஞகத் தரணியி லுறவே கிருபா
னந்தன் கோமதி கணேசா னந்தன்
எனுமிவர் தமைப் பெற்ற புனிதவதி
பத்ம நாதனை வரித்து சுபானு
புஷ்பா கரன் பிரபா கரன்
புதல்வ ராக வுற்ற திலகவதி
தம்மை யெய்திய செல்ல முத்து
சேயிழை நல்லாள் தங்க முத்துவை
பாரினில் வரித்தே வாழ்வு நடாத்தி
வட்டுக் கோட்டை யாழ்பிர தேச
ஆட்புல வேலைப் பகுதிஓ வசியர்
சிவ ஞானத்தினை மணந்து செந்தூரனைப்
பெற்ற நெசவு ஆசிரியை தவமணி
செல்வ ராணியை வாழ்க்கைத் துணையென
மருவியே பிருந்தா பனுடன் பார்த்திபன்
பகர் வைகுந்தன் தம்மைப் பெற்ற
கிளிநொச்சி நீர்ப்பாசன இலாக்கா தன்னிற்
தொழில் நுட்ப உதவி யாளர்
ராகும் பால சுப்பிர மணியம்
இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்
கணக்காய் வாளர் சிவபால னுடனே
ஆசிரியை யாகும் புஷ்ப ராணி
தம்மைப் பெற்ற கனக ராயர்
உடன்பிறப் பென்ன உள்ளத் துகந்தே
தடம்புவி வாழ்ந்த தாவிலா வள்ளல்
சுந்தர மூர்த்தியை மணந்து சரரதா
தேவியை வரித்த சிவபாத ரத்தினம்
செல்வி வசந்தா தேவியைக் கடிமண

மியற்றிய புகழோன் பாலச் சந்திரன்
ஆகிய மக்களை யெய்தியே வாழ்வு
நீத்த நங்கை தையல் நாயகம்
தம்பிப் பிள்ளையை மணந்தே சுந்தர
லிங்கம் புஷ்ப ராணி சேர்
சூர சங்காரன் சற்குண தேவி
யுடனே சிவ நேசன் விஷ்ணு
காந்தன் பகரும் காந்தி மதி
மக்களை யுற்ற தங்க முத்து
மைத்துனி களாக மன்னிய புகழோன்
இன்ன இனியன் நற்குண வாளன்
ஆண்டு ரத்தாட்சி ஐப்பசி நன்மதி
அபர பக்கம் அமைந்திடு நவமி
வியாழ னென்ன விளம்புநல் வாரம்
எனுமிவை யமைந்த இனியநற் றினத்தே
மக்கள் மருகர் மற்றுள பேரர்
சுற்றம் தன்னொடு ஊரா ரயலார்
கவலை கொண்டு அழுதே யரற்ற
செக்கரஞ் சடையோன் செய்ய திருவடி
பற்றும் விருப்பொடு பாரினில் மறைந்து
பேரா னந்தம் பெற்றனன் காணே.

## பொதுப் புலம்பல்

### (கட்டளைக் கலித்துறை)

அலையிற் பொலிகடல் சூழ்புவி தன்னினரும் புதல்வர்
வலையிற் படுமான் வருந்துவ தென்ன மறுகியுளம்
உலையிற் படுமெழு காகியுயங்க உளந் துணிந்து
கலையிற் பொலிமதி யோனருட் கேகல் கடமையன்றே.

அன்பும் பொறையு மடியார் கணேசமு மாதுலரின்
துன்பந் தவிர்ந்தரு ளீகையு மாந்தர் துதிநடுவும்
இன்பந் தருநன் மொழியு மெழில்தரு வின்முகவும்
உன்னேர் பெறவினி யுண்டே வுலகினி லுத்தமனே.

### மக்கள் கதறல்

பன்னு ளருந்தவஞ் செய்தெமை யெய்திப் பலவிதமாய்
இந்நாள் வரையிலு மன்பாய் வளர்த்த வியல்மறந்து
பொன்னுடு புக்கனை யையா வெமையிப் புவியின்மிசை
யெந்நாளிற் காண வருவாய் சொல்லாய்நல் லிரக்கமுற்றே:

### மருமக்கள் பிரிவாற்றுமை

மெய்யன்பு வாய்ந்திடு மாதுலவெம்மை விருப்பமுடன்
நெய்யா ரடிசில் மூதற்றந்து நற்புறம் நீவியுண்மை
பொய்யாம் நெறியிது வென்றுள மார்ந்திடப் போதிப்பையே
ஐயா விதியெமக் கிவ்வண்ண மாகிய தாற்றரிதே.

### மைத்துனர் மைத்துனி மனக்கவலை

அன்புற்ற மைத்துன கண்ணியம் நேர்மை அமைந்திடுவோய்
துன்புற்ற காலையில் வந்தே யுதவித் துலங்க வைத்தாய்
உண்சுற்ற மென்றிட வுள்ளங்களித்தேம் உனக்கிணையார்
என்புற் றுருகி யிளைத்து நின்றேம் விதியென் செய்ததே:

### சோதரி கண்ணீர்

செந்தா மரையாய்த் திகழுமுன் தோற்றப் பொலிவுகண்டே
சிந்தை மகிழ்ந்தே தினந்தினம் நல்வாழ் கொண்டனமால்
முந்தே புரிந்தவென் நல்வினை யின்றி முடிந்ததுவே
வந்தே யணைந்தென் மனத்துயர் போக்கிடும் நாளெதுவே.

### பேரர் பிரிவாற்றுமை (வெண்பா)

என்பேரர் என்றெம்மை எப்போதும் சாற்றியே
அன்பாய் எனையணைக்கும் ஏந்தலே — இந்நிலத்தில்
மிக்கனவும் துய்ப்பனவும் வேண்டுவன தந்தளிக்கத்
தக்கவர்நின் போலுண்டோ சாற்று.

### பெருமக்கள் மனத்துயர்

எங்கள் பெருத்தந்தை என்றுதினம் போற்றும்யாம்
உங்களுடல் காணு துயிரழிந்தோம் — தங்குலகில்
காற்றுய் மறைந்துநீர் சாருடலம் விட்டகலச்
சாற்றுகுறை யாவுளவோ தான்.

## சுற்றத்தார் சோகம்

அற்றேர்க் குதவி யளியென்றே யடைந்தோர்க்கு
மற்றுதவி தான்புரியும் மாமகிபா — பற்றுமிகும்
சுற்றம் வருந்தித் துயருறவே விட்டகலற்
குற்றகுறை யாதோ வுமக்கு.

## தேற்றம்

மன்னர் புகழ்சொக்க லிங்கம் தான்மறைந்தார்
என்னேகாண் ஏங்கி இரங்குகின்றீர் — மன்னும்
" புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்ருர் யார்? "

ஆன்மா சாந்தியடையக !

உ

# எனது இனிய நண்பன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்குச் சான்ருக வாழ்ந்த சான்ருேன் அமரர் சொக்கலிங்கம் ஆவர். அவர் கண்ணியம் மிக்க ஒரு கனவான். "சொக்கர்" என செல்லப் பெயர் பெற்ற அவர் அரச திணைக்களங்களின் நிர்வாகத்தில் மிகவும் திறமையான நிர்வாகியாகத் திகழ்ந்தார். அமரர் சொக்கலிங்கம் அவர்களுடன் 1962ம் ஆண்டு தொடக்கம் அவர் அரச சேவையிலிருந்து இளைப்பாறும் வரையும் அவருடன் ஒரே திணைக்களத்தில் மன்ஞரில் தொழில் புரியும் வாய்ப்பினைப் பெற்றேன். அவருடைய நேர்மையையும் கண்ணியத்தையும் எல்லோரும் வியந்து பாராட்டி புகழ்ந்து போற்றினர். பிறரின் பிழைகளை மன்னித்து மறக்கும் பெரும் தன்மை கொண்டிருந்தார். மென்மையும் நெகிழும் தன்மையும் கொண்டிருந்த அவர் உள்ளம் உறுதியும் கட்டுப்பாடும் உடையதாக இருந்தது. அழகிய கட்டமைந்த உடலும் புனிதமான வெள்ளை வெளேரென்ற உடையும், ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவும், அன்பும், அடக்கமும் நிறைந்த இயல்பும் இவருக்கு உரிய தனிச் சொத்துக்கள். என்னுடன் மன்ஞரில் பணிபுரிந்த காலத்தில் அவர் திறமையும் மதிநுட்பமும் அவரை உயர்த்தி வைத்தன என்பதை விட அவர் சேவையால் நானும் உயர்ந்தேன் என்பதைச் சிந்திக்கும்போது அவரின் மறைவு என் நெஞ்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

அமரர் சொக்கலிங்கம் அவர்கள் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின் சமயத் தொண்டிலும், எல்லா விரதங்களும் அனுஷ்டிப்பதிலும், இறை வழிபாட்டிலும் ஈடுபட்டார்; கடைசி ஓரிரு மாதங்கள் நோய்வாய்ப்பட்ட காரணமாக வெளியே போவதை நிறுத்தி இறை நடபிக்கையிலும் இறை வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தார்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்." — குறள்

திரு. சொக்கலிங்கம் மறைந்தார் என்று எண்ணுவதை விட இறையடியில் வாழ்கின்றார் என்பதையே நாம் கற்ற கல்வியும் பெற்ற அறிவும் நமக்கு உணர்த்துகின்றது.

எனது நண்பன் திருவாளர் சொக்கலிங்கம் அவர்களை இந்த நினைவுமலரில் நினைவு கூருவதற்கு எனக்குச் சந்தர்ப்பமளித்த அவரின் பிள்ளைகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அவரின் பிள்ளைகளுக்கும், குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

செயலகம்,
கச்சேரி,
யாழ்ப்பாணம்.

எஸ். சண்முகசுந்தரம்
உதவி அரசாங்க அதிபர்

## Appreciation

*I had associated with the* late Mr. Namasivayam Sockalingam *for the last 52 years. I had lost in him a very dear friend whom I consider much more than any of my relations, and the only friend I had in my life. I had spent the happiest period of my life with him for a period of 5 years from 1932—37 in Nuwara-Eliya where we worked. It is here that our friendship started and continued unabated until his demise on 18-10-84. In our retirement we were an inseparable pair and many in our village would have observed this fact. In 1983, I was very badly ill and he was almost a daily visitor to comfort me. Some years ago. I was returning home from leave when I met my friend at the road junction after he had lost his father a few days ago. I felt in a dream as if something untoward happening to my friend almost about the same time of his father's death. This must have been an intuition or something which I told him when we met. I regret I was not able to do anything in his last days except to console him in his sufferings off and on. Through him I came in close contact with his sons, daughter, son-in-law, daughters-in-law and his nephew Sivapalan. I had obtained special attention from his son, Attorney-at-law when I sought his services on a few occasions in view of my close friendship with his father.*

*He had a frugal life and spent the major patr of his savings for the uplitment of his children and on worship. Owing to my feeble state of health I regret I was uuable to participate fully in his last rites and had to return home early for which I am sure his closest kith and kin will forgive me - I take this opportunity to convey my heartfeql sympathies to them in our irreparable loss.*

*He was very religious in his life and a very regular temple worshipper, even in inclement weather, until his health permitted him to do so I am of the strong belief that his soul would take a re - birth in an environment endowed with sprituality which would help him to strive for further spiritual uplifment May his soul rest in peace.*

**S. Ponnampalam**

*Pannalai,*
*Tellippalai.*
9-11-84

உ

# எல்லாக்கும் இனியன்

திரு. நமசிவாயம் சொக்கலிங்கம் அவர்களது மறைவு எம்மனைவரையும் ஆற்ருெணுத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இப் பெரியாரை யான் எனது சிறுபருவத்திலிருந்தே நன்கறிவேன். இவர் எல்லோருக்கும் நல்லவராகவே வாழ்ந்து வந்தார். நற்சிந்தனைகளும், நல்வார்த்தைகளும், நற்செய்கைகளும் அவரிலே நிரம்பக் காணப்பட்டன. அவரை யான் சந்தித்து அளவளாவும் காலமெல்லாம் அன்பு ததும்பும் இன்மொழி நிரம்பியவராகவும் தம்மைப் போலவே மற்றவர்களும் சகல நற்பேறுகளும் பெற்று இனிது வாழவேண்டும் என்னும் பெரு விருப்புடையவராகவும் காணப்படுவர். இவர் அன்பின் சிகரமாய் விளங்கினுர் என்று சொல்வதில் மிகையில்லை. பிறர் மனம் வருந்த நடக்காத பெரியார் இவர்.

அவர் தமது மக்கள் சகல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று மனதார விரும்பினுர். அவர்கள் கல்வியிலும் விளையாட்டுப் போன்றவற்றிலும் ஈடுபட வேண்டும் என்ற எண்ணங்கொண்ட அவர் சிறுபராயத்திலிருந்தே தம் பிள்ளைகளைக் கீரிமலைக்கு அழைத்துச் சென்று நீந்தப் பழக்கினுர். தனிப் பாடல் ஒன்றிற் குறிப்பிடும் வண்ணம் தமது பிள்ளைகளைத் தமது மனதால் மட்டுமே பாராட்டுவார். அவரது பிள்ளைகளிடத்து அவர் கொண்டிருக்கும் அன்பையும் மதிப்பையும் அவடன் பழகுபவர் நன்கறிவர்.

தமது குடும்பத்தைப் பேணிக்காத்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வேண்டியவெல்லாஞ் செய்வது தமது தலையாய கடமையென்று உணர்ந்த திரு. சொக்கலிங்கம் அவர்கள் உத்தம புருஷனுகவும், உதாரண தந்தையாகவும் விளங்கினுர். வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம், கீரிமலை சிவன் கோயில், மாவை முருகன் ஆலயம், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் ஆகியவற்றிற்குச் சென்று வழிபடும் நியமமுடையவர்.

திரு. சொக்கலிங்கம் அவர்கள் கீரிமலை சிவநெறிக் கழக முன்னேற்றத்திற்கு உதவும் புரவலனுகவும் விளங்கினுர். எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்து இயற்கை எய்திய இப்பெரியாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவநெறிக் கழகம்,
கீரிமலை,
காங்கேசன்துறை. *1984-11-14*

ச. விநாயகரத்தினம்
சிவநெறிக் கழகச் செயலர்

---

# நன்றி

எமது குடும்பத் தலைவரின்
ஈமச்சடங்கு அந்தியேட்டி ஆகியவற்றிற்கு
நேரில் வருகை தந்தவர்களுக்கும்
அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும்
உதவிகள் புரிந்தவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை.
1984-11-17

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

குகன் அச்சகம், தெல்லிப்பழை

[illegible]

[illegible]

1984-11-1[illegible]

[illegible]